காரைநகர் இ.போ.சபையின் பொன்விழாவுக்கான
ஆரம்ப ஏற்பாடுகள்.

இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுமாறு காரைநகர் அபிவிருத்திச் சபையிடம் காரைநகர் சாலை அபிவிருத்திக் குழுவினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பொன்விழாச் சபையினரால் காரைநகர் அபிவிருத்திச்சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் எமது காரைநகர் சாலை 1976ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. 1990இல் இடம்பெற்ற யுத்தத்தினால் இச் சாலை கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனை மீளவும் திருத்துவதற்கு இ.போ.சபையின் மான்புமிகு அமைச்சரிடம் நிதியுதவி கேட்டபோது திருத்துவதற்கான நிதி தங்களிடம் இல்லையென்று கூறிவிட்டார்கள்.

தற்போதும் எமது காரைநகர் சாலை தொடர்ந்தும மிகமோசமாகப் பழுதடைந்தே காணப்படுகின்றது. எமது சாலையை அழியவிடாது மீளவும் புனரமைத்துத் தருவதற்கு காரைநகருக்கு வெளியேயும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த காரைநகர் மக்கள் நிதியுதவி செய்து தருமாறு தங்களை காரைநகர் சாலையின் பொன்விழாவுக்கும், அபிவிருத்திக்குமான குழு சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். கீழ்காணும் வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டி உள்ளன.

| | |
|---|---|
| காரைநகர் சாலையினுள் பஸ் வண்டிகள் செல்லும் பாதை புனரமைப்பு | 180000.00 |
| பஸ் பழுதுபார்க்கும் ராம்ப் | 500000.00 |
| சுற்றுவேலி | 300000.00 |
| வயறிங்வேலை | 200000.00 |
| கட்டிடத்திருத்தம் | 200000.00 |
| மொத்தம் | 1,380000.00 |

மேற்படி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதியுதவி வழங்க விரும்புவர்கள் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஊடாக வழங்க முடியும்.

இங்ஙனம்
திரு.ப.விக்கினேஸ்வரன்
தலைவர்:- காரைநகர் அபிவிருத்திச் சபை
காரைநகர் சாலையின் பொன்விழாவுக்கும், அபிவிருத்திக்குமான குழு.
29.06.2016 காரைநகர்.